841

ARYA DHARMAM
TAMIL WEEKLY.
REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	
[தபால் செலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஞு சித்திரை-மீ 20உ 1940-ஞு மேமீ 2உ. | ல-18

மீண்டும் காங்கிரஸ் மந்திரிகள்...?

ஸர். ஜகதீச பிரஸாத் யோஜனை

வைஸ்ராய் நிர்வாஹ ஸபை மெம்பராயிருந்த ஸர் ஜகதீச பிரஸாத் வெளியிட்டுள்ள ஓர் அவஸர அறிக்கையில் இந்திய நெருக்கடி தீருவதற்கு ஓர் யோஜனை கூறுகிறார். அதாவது காங்கிரஸ்காரர்கள் மறுபடியும் மந்திரி பதவியேற்று 7 மாகாணங்களின் நிர்வாஹத்தை முன்போல் நடத்த முன்வரவேண்டும். அப்படிச் செய்தால் தான் வகுப்புச் சச்சரவும் தீருமாம். மாகாண பிரதம மந்திரிகளே வகுப்பு ஸமரஸத்தை ஏற்படுத்தக் கூடிய முறைகளை நிர்ணயிக்க முடியுமாம். பதவி ஏற்ருல் வகுப்பு சச்சரவு அதிகரிக்குமென்ற வாதத்தை அவர் ஒப்பவில்லையாம்.

சீக்கிரத்தில் காந்திஜி இத்தகைய அறிக்கையை வெளியிட்டு நெருக்கடியைத் தீர்க்க முன்வரவேண்டு மென்கிருர். இவருடைய அபிப்பிராயத்தை ஸர். என். என். ஸர்க்காரும் ஆதரிக்கிருர்.

முஸ்லீம்களின் விரட்டல்.

காந்திஜிதான் காரணம்

டாக்டர் மூஞ்ஜே கண்டனம்

ஐக்ய மாகாண உனே ஜில்லா ஹிந்து மஹா ஸபைக் கூட்டத்தில் டாக்டர் மூஞ்ஜே தலைமை வகித்துப் பேசுகையில், குறிப்பிட்டதாவது:— ஹிந்துக்களின் தற்போதிய துர்ப்பாக்ய நிலைமைக்கு ஸ்ரீமான் காந்தியேதான் ஜவாப்தாரி யென்றும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை காந்திஜி வற்புறுத்த வற்புறுத்த, முஸ்லீம்கள் அதிகமிருக்காட்டி தங்கள் கோரிக்கைகளை வலுப்படுத்தி வருகிருர்களென்றும், ஹிந்துகளுக்காகப் பேசக்கூடியவர், ஹிந்து மஹா ஸபையும், ஸ்ரீ ஸவர்க்காருமேயல்லது, காங்கிரஸோ, காந்தியோ அல்லவென்றும், இந்தியஸ்வராஜ்யத்திற்கும் ஹிந்து— முஸ்லீம் ஒற்றுமைக்கும் ஸம்பந்தமில்லை யென்றும் சொன்னர்.

ஜின்னுவின் பிரிவினை திட்டத்தைக் கண்டித்து மஹா நாட்டில் தீர்மானம் செய்யப்பட்டது.

மது விலக்குக்கு ஆபத்து

பம்பாயில் ஸங்கடம்

பம்பாய் ஹைகோர்ட்டானது, காங்கிரஸின் மதுவிலக்கு உத்திரவு சட்டப்படி செல்லாதென்று சொல்லி விட்டது, இதன் மேல் பம்பாயில் மதுவிலக்கு முயற்சியே முறிந்து விடு மென்று தோன்றுகிறது.

அமெரிக்காவிடம் சிபார்சு?

ஸி. ஆர்., நேரு தூது.

இந்திய ராஜீய நெருக்கடி நிலைமையையும் காங்கிரஸின் கொள்கையையும் எடுத்து கூறி அமெரிக்காவின் அனுதாபத்தைப் பெறுவதற்காக, ஸி. ராஜகோபாலாசாரியரும், பண்டித நேருவும் அமெரிக்கா போக காங்கிரஸ் உத்திரவு கொடுக்குமென்று பிரஸ்தாபிக்கப் படுகிறது.

முஸ்லீம் லீகுக்கு ஸுபாஷ் ஆதரவு!

மேயர் தேர்தலில் ஹிந்துக்களுக்கு விபரீதம்.

கல்கத்தா கார்ப்பரேஷன் மேயர் தேர்தலில் முஸ்லீம் லீகைச்சேர்ந்த ஒரு மஹம்மதியர் வெற்றி பெற்ருர். கார்ப்பரேஷனில் உள்ள போஸ் கக்ஷியைச் சேர்ந்த காங்கிரஸ் ஹிந்துக்கள் யாவரும் முஸ்லீம் லீகுகாரரை ஆதரித்து வோட் செய்தார்கள் ஹிந்து மஹா ஸபையின் அபேக்ஷகரான ஹிந்து கனவான் இதனுல் தோற்றுப் போக நேர்ந்தது. இதனுல் போஸ்கக்ஷியாரிடம் கல்கத்தா ஹிந்துக்களுக்கு ஆத்திரம் உண்டாகியிருக்கிறது.

வைஸ்சான்ஸலர் பதவி

சென்னை ஸர்வகலாசாலை வைஸ்சான்ஸிலர் பதவிக்கு ஸர் மஹமது ஊஸ்மான் ஸாஹிப் அவர்களை சென்னை கவர்னர் நியமனம் செய்துள்ளார்.

ஸ்திரீகளுக்கு புத்திமதி

"பிராசீன ஸம்பிரதாயத்தை கைவிடக்கூடாது"

ஸம்ஸ்கிருதம் நமது தாய்பாஷை

சென்னை திருவல்லிக்கேணியில் சாமராவ் உயர்தர எலிமெண்டரி பாடசாலையில் அட்வகேட் ஜனரல் ஸர் அல்லாடி கிருஷ்ணஸாமி அய்யர் பேசுகையில் சில முக்கிய விஷயங்களை குறிப்பிட்டார்.

நமக்கென்று தனியாக ஒரு பாரம்பரிய ஸம்பிரதாயம், தர்மம், ஞானம் முதலியனவை இருக்கின்றன வென்றும், ஸ்திரீகளுக்கு புராணங்கள், புராதன கிரந்தங்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளில் ஞானம் ஏற்பட வேண்டியது அவச்யமென்றும், நமது பழைய ஸம்பிரதாயங்களை ஒழித்து விடக்கூடாதென்றும், ஸ்திரீகளுக்கு ஸம்ஸ்கிருத ஞானம் அவச்யமிருக்க வேண்டுமென்றும் ஸம்ஸ்கிருதத்தின் மேல் தான் நமது, வித்யை நாகரிகம் முதலிய ஸகல விஷயங்களும் கட்டப்பட்டிருக்கின்றன வென்றும், ஸம்ஸ்கிருதமே நமக்குத் தாய்பாஷை யென்றும், புராதான தர்மம், நாகரீகம் இவைகளின் ஸம்பந்தத்தை ஸ்திரீகள் விட்டு விடக் கூடாதென்றும்," ஸர் அல்லாடி பேசினர்,

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'
ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிரைப்பள்ளி.

அகில இந்திய ஸனாதனி தலைவர்கள் மகாநாடு.

நாகபுரி கூட்டத்தின் தீர்மானங்கள்.

ஸ்ரீ கோவர்த்தன மடம் பூரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் தலைமையில் சென்ற மார்ச்சு மாதத்தில் நாகபுரியில் நடைபெற்ற ஸனாதனி தலைவர்கள் மகாநாட்டில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்களின் விபரம் :—

ஜனங்களின் மதம், கலை இந்த விஷயங்களில் அந்தந்த மதம், சமூகம், அதிலுள்ள பல்வேறு பிரிவினர்கள் அவரவர்களது மனஸ்ஸாக்ஷிப்படி நடந்துகொள்வதற்கான சுதந்தரம், ஜீவாதார உரிமையாக உலகத்தில் எல்லா அரசியல்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அரசாங்கம் இந்த உரிமைகளில் தலையிடக்கூடாதாகையாலும், ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியும் அவருக்குப்பிறகு வந்த காங்கிரஸ் தலைவர்களும் இந்த உரிமையை பல சமயங்களில் உறுதிசெய்து பிரகடனப்படுத்தியிருப்பதாலும்,

இப்பொழுது 1935௵த்திய இந்திய கவர்ன்மெண்டு சட்டப்படி கிடைத்திருக்கும் புது அரசியலில் தர்ம விருத்தமாயும், சட்ட விரோதமாகவும், அநியாயமாயும் இந்திய சமூகங்களின் மதங்கள், கலைகள் இவைகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படாமல் விடப்பட்டு, அந்த சட்டத்தின்கீழ், காங்கிரஸ் ஆட்சிக்குட்பட்ட மாகாணங்கள் பலவற்றில், மதம், கலை, இவைகளை நிர்ப்பந்த முறையில் அழித்துவிடும் ரீதியில் அரசியல் நடைபெற்றிருப்பதிலிருந்தும் இந்த அரசியல் இந்திய மகாஜனங்களுடையவோ, அதில் ஏகதேசத்தினருடையவோ நம்பிக்கைக்கு பாத்திரமாக இல்லையென்பது நன்றாக தெளிவாகிவிட்டதாலும்,

1. இந்திய தேசத்தின் மதசம்பந்தம் பெற்ற தேசீய வாழ்க்கைக்கு பாதுகாப்புடன் நீடித்த அமைதி, சந்துஷ்டி, செல்வம் இவைகள் நிலவும் ரீதியில் இந்திய அரசியல் சம்பந்தமான எல்லா அம்சங்களும் மறுபடி ஆலோசிக்கப்படவேண்டும்.

2. மதம், கலை இவை சம்பந்தமான உரிமைகளை புதிய அரசியலில் பாதுகாப்பதற்கான வசதியளித்து, அந்த பாதுகாப்புகள் மெஜாரிடி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு கிடைக்கும்படியும், அந்த மெஜாரிடி வகுப்பைச்சேர்ந்த ஜனங்கள் அல்லது அதில் ஏகதேசமாயுள்ள பிரிவினர்களின் உரிமைகள், சட்டசபைகளிலுள்ள மெஜாரிடி பலம்கொண்ட கக்ஷிகளாலோ அல்லது மெஜாரிடி வோட்டுகளாலோ பங்கப்படுத்தப்படாமலுமிருக்க வகை செய்யவேண்டும்.

3. வகுப்பு தீர்ப்பு, புனா ஒப்பந்தம் இவைகள் நீங்கி, பொதுத்தொகுதி முறையில் அரசியல் அமைக்கப் படவேண்டும். ஒரு வகுப்பாரின் மதம், கலை, இந்த உரிமைகளில் மற்ற வகுப்புகள் அல்லது ராஜீயக் கக்ஷியின் ஆக்ரமிப்பு ஏற்படாதபடி செய்ய வேண்டும்.

4. ஸனாதனி ஹிந்துக்கள் அங்கீகரிக்கக்கூடிய அரசியல் அவர்களுடைய மதத்தலைவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். ஸனாதனி ஹிந்துமதத்தலைவர்களால் அங்கீகாரம் கொடுக்கப்படாததும் மேலே கண்ட உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்காததுமான எந்த ராஜீயதிட்டம் அல்லது அரசியல் முறையையும் ஸனாதனி ஹிந்து சமூகம் அங்கீகரிக்காது.

ந. நி.

தஞ்சையில் ஆந்திர மஹா ஜனக் கூட்டம்

முத்ராதிகாரி பிரசாரம்

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய ஆக்ஞைப் பிரகாரம் ஸ்ரீமடம் முத்ராதிகாரி டி எஸ் வாசுதேவ சாஸ்திரிகள் அவர்களால் விக்ரம ௵ சித்திரை௴ 1உ சனிக்கிழமை (18-4-40) மாலை 6½ மணிக்கு தெற்கு ராஜவீதி ஸ்ரீ தர்மராஜ தீக்ஷிதர் அவர்கள் கிருஹத்தில் ஸ்ரீ காமாக்ஷி படத்திற்கும் ஸ்ரீ ஆசார்யாள் படத்திற்கும் வேதோக்தமாய் பூஜைகள் நடத்தியும் எல்லோரும் வந்தனங்கள் செய்தவுடன் டி எஸ் வாசுதேவ சாஸ்திரிகள் அவர்களால் மகா-ா-ா-ஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் அவர்களை ஷை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி ப்ரேரேபிக்கப்பட்டு வக்கீல் ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

எஸ் கணபதி சாஸ்திரிகள் தலைமை வகித்து ஸ்ரீ ஆசார்யாளுடைய ஸ்ரீமுகத்தை மூன்றுதரம் படிக்கும்படியாகவும் ஸ்ரீ ஆசார்யாளுடைய ஆக்ஞைகளை எல்லோரும் நிறைவேற்றும்படியாகவும் கேட்டுக்கொண்டு உபநயன வயது கிரமத்தையும் விவாஹ வயது கிரமத்தைப்பற்றியும் திருவிசைநல்லூர் பிரம்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளை உபன்யாஸம் செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களால் ஷை உபநயன வயதையும் விவாஹத்தைப் பற்றியும் விரிவாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

வந்திருந்த மஹாஜனங்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் டி எஸ் வாசுதேவ சாஸ்திரிகள் அவர்களாலும் தர்மராஜதீக்ஷிதர் அவர்களாலும் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது.

பிறகு தர்மராஜ தீக்ஷிதர் அவர்களால் "பியானோ" வாத்தியம் வாசிக்கப்பட்டு நாம சங்கீர்த்தனங்களுடனும் கூட்டம் இனிது முடிவடைந்தது. (ஒநி)

முத்திராதிகாரிகளின் பிரசாரம்

குடந்தை

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் அவர்கள் ஆக்ஞைப் பிரகாரம் விக்கிரம-௵ சித்திரை ௴ 6-உ (18—4—1940) வியாழக்கிழமை அன்று ஏகாதசியை முன்னிட்டு மேட்டுத்தெரு ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் சன்னதியில் மாலை 4½-மணிக்கு மன்னார்குடி வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் "குசேல உபாக்கியானம்" என்னும் சரித்திரத்தை மகாஜனங்கள் மனதில் பக்தி உண்டாகும் வண்ணம் உபன்யஸித்தார். ஷை உபன்யாசத்தை சிரவணம் செய்ய வெகு ஆஸ்திகர்கள் டவுனின் பல பாகங்களிலிருந்து விஜயம் செய்திருந்தார்கள்.

வருகிற சித்திரை௴ 21உ (3. 5. 40) வெள்ளிக்கிழமை மாலை 4½ மணிக்கு ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ சங்கரபகவத்பதாச்சாரியாளின் ஆக்ஞைப்ரகாரம் விக்கிரபாண்டியம் பிரம்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் அவர்களைக்கொண்டு ஜடபரத உபாக்கியானம் என்னும் சரித்திரம் உபந்நியாசம் நடத்தப்படும்.

டி. ஜே. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ மடம் முத்ராதிகாரி.

சேங்காலிபுரம்
ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவம்

ஸ்ரீராமாயணம் புராணகேஸரி பிரும்மஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்திரியாள் அவர்கள் கிருஹத்தில் வழக்கம்போல் ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் நடைபெற்றது. (15—4—40) திங்கள் மாலை 4-மணி முதல் பருத்தியூர் வைத்தினாத தீக்ஷிதர் அவர்களால் பாயஸப்பிரதானகட்டம் பிரவசனம் செய்யப்பட்டது. இரவு ஏழுமணிமுதல் திருச்சேரை ஸ்ரீமான் சிதம்பரமய்யர் அவர்களால் வேணுகானம் செய்யப்பட்டது. (16-4-40) செவ்வாய் ஸ்ரீ ராமநவமியன்று கடகலக்கினத்தில் ஷை அப்பாஸ்வாமி சாஸ்திரியார் அவர்களால் ஸ்ரீ ராமாவதாரகட்டம் பாராயணம் செய்து பிரவசனம் செய்யப்பட்டது இரவு ஏழுமணி முதல், உள்ளூர் ஸ்ரீமான் ராமமூர்த்தி அவர்களால் பூங்குளம் சபேசனது மிருதங்கத்துடன் கானம் செய்யப்பட்டது. ஷை சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ ஸீதாகலியாணம் பிரவசனம் செய்யப்பட்டு ஸ்ரீ ஆஞ்சிநேயர் உத்ஸவத்துடன் பூர்த்தி அடைந்தது-

ராமமூர்த்தி,
சேங்காலிபுரம்.

வடுவூரில் ஸனாதன தர்ம பிரசாரம்

வடுவூர் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி பிரும்மோத்ஸவத்தில் ஸ்ரீ ராமபத்ராசார் ஸ்வாமிகளவர்களால், 20—4—40ல் தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீஉபய-வே கோதண்டராமய்யங்கார் ஸ்வாமி தலைமையில் "வைதிகமதமும் சீர்திருத்தக்காரர்களும்" என்கிற விஷயம் பற்றி இரவு 9 மணி முதல் 10 மணி வரையிலும், 21—4—40ல் பரவாக்கோட்டை ஸ்ரீஉபய-வே வெங்கடாசார் சுவாமி தலைமையில் "வேதசாஸ்திரங்களின் தத்துவார்த்தங்கள்" என்பதுபற்றியும், 22—4—40ல் வடுவூர் வித்வான் ஸ்ரீஉபய-வே ராமபத்ராசார் சுவாமி தலைமையில் "மோக்ஷ உபாயம்" என்பதுபற்றியும், விரிவான உபன்யாசங்களை நடத்தினார். அதில் நாஸ்திகத்தை பலமாக கண்டித்தும், ஆஸ்திகத்தை ஸ்தாபித்தும், காங்கிரஸ் ஆலயப்பிரவேசம் போன்ற மதவிஷயங்களில் தலையிடுவதை கண்டித்தும் ஆஸ்திகர்கள் யாவரும் ஒற்றுமையுடனிருந்து மதத்தை ரக்ஷிப்பதில், தங்களால் இயன்ற உதவிகள் செய்யவேண்டுமென்றும், கேழ்ப்போர்க்கு உணர்ச்சி ததும்பும்படியாகவும், மாபெரும் கூட்டத்தில் அழகாக பேசினார்கள். கூட்டம் இனிது முடிந்தது. (ஒ-நி)

கவர்னர் ஆக்ஷி நீடிக்கப் பட்டது

இன்னும் ஒரு வருஷம்

காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்துவிட்ட பிறகு 93-வது பிரிவுப்படி கவர்னர்களே மாகாணத்தை நிர்வஹித்து வருகிறார்கள். ஸமரஸம் ஏற்படாத காரணமாக இன்னும் ஒரு வருஷம் வரையில் மாகாண ஸ்வய ஆட்சியை ரத்து செய்து, கவர்னர் ஆக்ஷியைநடத்த பார்லிமெண்டில் அநுமதி வாங்கப்பட்டுவிட்டது.

லார்டு ஸபையில் இந்தியா மந்திரியும் காமன்ஸில் அவர் கார்யதரிசியும் இந்திய ராஜீய நிலைமையைப் பற்றிப் பேசுகையில் சட்ட மறுப்பு போன்ற கிளர்ச்சிகள் ஆரம்பிக்கப் பட்டால் கவர்ன்மெண்டார் தகுந்த முறையில் அதை அடக்க முற்படுவார்களென்று எச்சரிக்கை செய்து பேசினார்கள்.

பசுவின்பாலின் உயர்ந்த குணங்கள்.

பாரத தேசத்தில் தேக புஷ்டிக்கு முக்கியமானது பாலாகும். நாட்டுப் புறங்களில் விவசாயிகள் சாதாரணமாக பால் சாப்பிடுகிறார்கள். ஆனால் இது எல்லோருக்கும் கிடைக்காது. இதுதான் இருக்கிற கஷ்டம். அவன் கன்றுகுட்டிகளை வளர்க்கிறான், பாலை அவன் எவருக்கோ கொடுக்கிறான், இதற்கு காரணம் கடன் பாதையேயாகும் ரயத்துகளுடைய கடன் பாதையை நீக்கும். மார்க்கத்தை எத்தகையதென்று தெரியாமல் பெரியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒவ்வொரு விவயஸாயும் தன் கன்றுக்குட்டிகளுடைய பாலை தானும் அவன் குழந்தைகளும் சாப்பிடும் யோகம் அடைந்தால் அவர்களுடைய ஆரோக்கியத்திற்கு வேறு ஆலோசனை செய்ய வேண்டியதில்லை. பட்டணங்களில்கூட பசும்பால் எருமைப் பால் இவைகளில் தண்ணீர கலந்து விற்கிறார்கள். அது அவ்வளவு சிரேஷ்டமில்லை அதைதான் பட்டண வாசத்தில் குடிக்கிறார்கள். பசுக்களுக்கு வேண்டிய தீனியும் பட்டணங்களில் சரியாக இல்லாமல் போனதினால் அவைகளுடைய பால் புஷ்டிகரமாக இருக்கிறதில்லை.

நமது பழய சாஸ்திரங்களில் கூறியுள்படி நம் தேசத்தவர்களுக்கு பசும்பால் மிகவும் அவசியமானது என்பது திண்ணம். பலமுள்ள தென்றும் சீக்கிரம் ஜீர்ணிக்க கூடியதென்றும் ஜீர்ணிக்க முடியாதவர்கள்கூட குடிக்கலா மென்றும் பொது ஜனங்களினுடைய அபிப்பிராயமாகும். ஆயுர்வேத வைத்தியர் எப்படிப்பட்ட நோய்களுக்குங்கூட பசும்பால் பத்தியம் கூறுகிறார். எருமைப் பால் உபயோகிக்கும்படி சொல்லார். சில பிராந்தியங்களில் பசும்பால் கிடைக்காமையால் எருமைப்பாலையும் ஆட்டுப்பாலையும்கூட உபயோகிக்கிறார்கள்.

தயிர்—மோர் குணங்கள்.

பாலின் விக்ருதிகள்:— தயிர் மோர்—பாலில் புளிப்பு சேர்ந்தால் தயிர் என்று பரூபம் ஏற்படும். இதுகூட மிகவும் உத்தமமான ஆகாரமாகும், பாலைவிட சீக்கிரத்தில் ஜீரணமாகக் கூடியது. நல்ல சுவையுடையது. தயிர் மோர் என்ற க்ஷீர வஸ்துக்கள் நம் நாட்டில் எப்பொழுது ஏற்பட்டதென்பது சொல்ல முடியாது. இவை இரண்டும் ஆயுர்வேதம் கண்டுபிடித்த உயர்ந்த ஆகாரங்கள். இதர தேசத்தவர்களுக்கு இதனுடைய பிரபாவம் சரிவர தெரியாது.

"தக்ராந்தம் போஜனம் ஸ்மிருதம்" "சாப்பாட்டிற்கு மோர் கடைசி முத்திரை" என்பது வழக்கந்தானே! ஒவ்வொருவரும் சாப்பாட்டின் கடைசியில் மோரும் சாப்பிடுகிறார்கள். தாகமடைந்தவர்களுக்கு மோரை கொடுக்கிறார்கள். மோர் கணைச் சூட்டை தணிக்கிறது என்றும் மேகசாந்தி என்றும் பொதுமக்களுடைய எண்ணமாகும். மோரில்லாத போஜனம் என்றால் நமக்கு ருசியற்றது. மோரை ஒரு புலவர் வர்ணிக்கிறார்.

"எலா நாகர சம்யுக்தம் சிஞ்சில்ல
வண மிச்ரிதம், ஜம்பீர ரஸஸம்யுக்
தம் தக்ரம் சக்ரஸ்யதுர்லபம்"

எலக்காய், சுக்கு, பொடி செய்து, கலந்து கொஞ்சம் உப்புபோட்டு, வேண்டியளவு எலுமிச்சம் ரசத்தை சேர்ந்த மோர் தேவேந்திரனுக்கும் கிடைக்காது.

ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கம்

தென்னாற்காடு.

தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற திங்களன்று மாலை ஷை சங்க தலைமை ஆபீஸ் கட்டிடத்திற்கு எதிரில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னை கார்பொரேஷன் மேயர் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் இந்நகரில் சென்ற 29உ யன்று பேசிய பொதுக்கூட்டங்களுக்குப் போயிருந்த ஜனங்களை விட அதிக அதாவது, இரண்டுபங்கு நபர்கள் ஷை சங்கப் பொதுக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள் எனக்கூறபடுகிறது. வர்ணாஸ்ரம சங்கத்தின் கூட்டத்திற்கு பிரும்மஸ்ரீ முத்து சாஸ்திரிகள் தலைமைவகித்தார். அவர் பேசியபோது ஜாதிப்பிரிவுகள் அவசியம் வேண்டுமென்றும், எல்லா வேதாந்த சாஸ்திரங்களும் வர்ணாஸ்ரம ரீதியை அனுசரித்தே இருக்கிறதென்றும், ஒவ்வொருவரும் முன்வந்து தற்போது செய்ய வேண்டியகடமைகளையும் விஸ்தாரமாக எடுத்துக் கூறினார். ஏ. வி. சௌரிராஜ பட்டாசாரியார் பேசியபோது ஒவ்வொருவரும் வர்ணாஸ்ரமதர்ம ஸ்வராஜ்யசங்கத்தில் சேரவேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

ஸ்ரீமான் கே. முத்துகிருஷ்ணபிள்ளை, பண்டிட் விஜயராகவாசாரியார், சிதம்பரம் தாலூக்கா வர்ணாஸ்ரமதர்ம பிரசாரகத்தலைவர், இவர்கள் பேசிய பின்னர், சௌரிராஜபட்டாச்சாரியார் அவர்களது வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைவுற்றது.

(ந. நி.)

தேவேந்திரன் மிகவும் பெரியவன். ஆயினும் மனிதர்கள் யக்ஞம் செய்து அர்ப்பணம் செய்தால் தான் அவருக்கு சாப்பாடு கிடைக்கும். இந்த அர்ப்பணங்களில் நெய் பால் தான் கொடுப்பார்கள் மோர் அர்ப்பணம் செய்வதில்லை. அதனால் எப்பொழுதும் அந்த தேவராஜனுக்கு மோர் சாப்பிடுகிற யோகம் இல்லை. அவருடைய ஜீவகாலத்தில் மோரின் சுவை அறிந்திலான் என்றால் தேவேந்திரன் இச்சுவையறிய மானிட ஜன்மம் எடுக்க வேண்டுமென்பது தான் தாத்பரியமாகும். இந்த விதமாக சாஸ்திரங்களிலும் விவகாரத்திலேயும்கூட மோரை நம் பாரத மக்கள் வர்ணிக்கிறார்கள்.

நம்முடைய தேகத்தில் குடல்கள் அநேகமாய் விஷத்தன்மை யடையும்படியாக இருக்கின்றன. நம்முடைய ஜீர்ண உருப்புகளின் வழியாக விஷம் குடலில் சென்று தங்குகின்றது இரத்தத்திலிருந்துகூட சில விஷங்கள் குடலில் வந்து சேருகின்றன இக்காரணத்தினால் குடல்களில் கழிவு பதார்த்தங்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன; இந்த கழிவு பதார்த்தங்களை அப்புறப்படுத்தாமல் விட்டால் இரத்தத்தில் கலந்து பல நோய்களை உண்டாக்கும் அதனாலே தான பல நோய்களுக்கு குடல்தான் காரணம் என்று நிச்சயித்திருக்கிறார்கள். ஆங்கில வைத்தியர்களின் சிறுபான்மையோர் இந்நோய் உண்டாகாதபடி ஒரு வழியை கண்டு பிடித்து வருகிறார்கள்.

(தொடரும்)
"மிராசுதார்"

ஆக்ஷேபகரமான ஸ்ரீ சங்கராசாரியார் தமிழ் படம்.

அரோரா பிலிம் கம்பெனியால் தயாரிக்கப்பட்ட ஸ்ரீ சங்கராசாரியர் தமிழ்ப் படத்தை வெகுவாக ஆக்ஷேபித்து ஓர் மகஜர் பெட்டிஷனை தென்னாற்காடு ஜில்லா பிரபல ஆஸ்திகர்களின் சார்பாக சென்னை பிலிம் சென்ஸார் போர்டு சேர்மன் அவர்களுக்கு சிதம்பரத்திலிருந்து அனுப்பி வைத்திருப்பதாக தெரிகிறது.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி விஜயம்.

சென்னை மெயர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் இங்கு 26-ந்உ யன்று விஜயம் செய்தார். தனது காங்ரஸ் இயக்க ஆக்க வேலைகளில் அன்றையதினம் ஈடுபடுவதற்கு முன், ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு விஜயம் செய்து ஸ்வாமி தரிசனம் செய்தார். காங்ரஸ்காரர்களில் ஸ்வாமி தரிசனம் செய்வதில் நம்பிக்கை உள்ளவர்கள் வெகு வெகுக் சிலரேயாவராம். இந்நகர் கோயிலில், போர்டு மானேஜர் அவர்கள் சட்டையுடன் கோயில் எல்லைக்குள் இருப்பதைக்கூட ஷை மேயர் அவர்கள் பார்த்து ஆதரிக்கவில்லையாம். எண்டோன் மெண்டு போர்டு தலைவர், கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள், முதலிய உத்தியோகஸ்தர்கள், இனியாவது கோவிலுக்குள்வரும் போதாவது தங்களது சட்டைகளைக் கழற்றிக் கொள்ளவேண்டும். மேலும் அநாகரீகக் கிராப்புகளையே எடுத்து விடுவதுடன் அவர்வர்களுக்குரியபடி விபூதிருத்திராக்ஷறங்களை தரித்துக் கொள்ளவேண்டும் மதகிரந்தங்களை அறிந்து வரவேண்டும். அநாசார நாகரீகத்தில் ஈடுபடக்கூடாது இனி இவை மாதிரி சாஸ்திரீயமான நடையுடையில் போர்டார்கள் மாறிவருவார் ... பேசிக்கொள்ளப் படுவதாகவும் அறிகிறோம் சரியானபடி சாஸ்திர நீதியில் போர்டார் நடந்து கொள்ளாவிடின் இது சம்மந்மாக அவர்களைத்திருத்த ஓர் இயக்கத்தை பொது ஜனங்கள் ஏன் ஏற்படுத்தக் கூடாது? எனவும் சிலர் பேசிவருவதாகவும், தெரிய வருகிறது.

(ந. நி.)

ஏழை விதவைப்பெண்.

தகப்பனார் ஸொத்தில் பாத்யமுண்டு

ஹைகோர்ட் தீர்ப்பு

சென்னை ஹைகோர்ட்டில் ஓர் முக்யமான தீர்ப்பு 23-உ யன்று புல் பெஞ்சினால் செய்யப்பட்டுளது.

ஏழையான ஒரு ஹிந்து விதவை ஜீவனத்திற்கு வழியில்லாமலிருந்தால் அவளுக்குத் தமது தகப்பனாருடைய ஸொத்திலிருந்து விதம்பெற உரிமையிருப்பதாயும் விதவைப் பெண்ணைக் காப்பாற்றவேண்டுமென்ற நியமம் வார்சுதாரிடம் வரும்போது அது சட்டபூர்வமான ஒரு விஷயமாகி விட்டதாயும், அதன்படி அவளுக்கு அந்த ஸொத்திலும் உரிமை ஏற்படுவதாயும் ஜட்ஜிகள் தீர்ப்புக் கூறினார்கள்.

ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ரநாமம்
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்செலவு அணா 1.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஞு சித்திரை-மீ 20உ

மதுரை ஆலயப்ரவேச வழக்கின் நிலைமை.

மதுரை மீனாக்ஷி கோவிலில் தீண்டாதார் பிரவேசம் காரணமாக அவ்வூர் சப்கோர்ட்டில் நடந்துவரும் கேஸின் நிலைமையை நமது நேயர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவச்யம்.

1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டப்படி ஆலயப்ரவேசம் போன்ற மதஸம்பந்தமான விஷயங்களில் சட்டஸபைகள் சட்டம் செய்வது செல்லுபடியாகக் கூடியதுதான் என்று மதுரை ஸப்ஜட்ஜ் தீர்ப்புக்கூறியதையும், ஆசாரத் திருத்தவிஷமிகளின் வேலையால் இத்தகைய நிர்க்கதியான நிலைமை மதங்களுக்கு ஏற்பட்டுவிட்டதையும் ஏற்கனவே குறிப்பிட்டோம். இது நிற்க, ஸப்ஜட்ஜ் மேற்படி ஆலயப்பிரவேச விஷயமாக, வழக்கத்தையொட்டி சில விஷயங்களை விசாரிக்க விரும்பினார். அதாவது ஆலயப்பிரவேசச்சட்டப்படி தீண்டாதார் த்வஜ ஸ்தம்பம் தாண்டி உள்ளேபோக இருந்து வந்த தடை நீக்கப்பட்டுவிட்டதாலும், ஸ்வாமி தர்சனம் செய்யச் சென்ற ஒவ்வொரு வகுப்பாரும் இன்னின்ன இடங்களில்தான் நின்று தர்சிக்கவேண்டும் என்ற வியவஸ்தை நீண்ட காலமாக தேவாலயங்களில் இருந்து வருகிறது. ஆலயப்பிரவேசச் சட்டத்தில் மேற்கண்ட வியவஸ்தையை தடை செய்யக்கூடிய விதி ஒன்றும் காணப்படவில்லை. ஆதலால் தீண்டாதார் த்வஜஸ்தம்பம் தாண்டிச் சென்றாலும் பிராம்மண க்ஷத்திரியாதி ஜாதி வியவஸ்தைப்படி தர்சனம் செய்யுமிடம் அவர்களுக்குத் தனியாக இருக்கவேண்டுமென்றும் ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டு இவ்விஷயத்தைப்பற்றி பிரதிவாதிகள் எழுத்து மூலமான ஸ்டேட்மெண்ட் கொடுக்கும்படி உத்திரவு செய்தார்.

[illegible]ன்மேல் பிரதிவாதிகள் பயந்து [illegible]றுக்குவழியாக இறங்கி வேறு கக்ஷி [illegible]சால்லத் தொடங்கினார்கள். அதாவது [illegible]ப்பிரவேசச் சட்டம் செல்லு[illegible] கூடியதுதானென்று ஜட்ஜ் [illegible]யப்பட்டுவிட்டபடியால் மற்ற அம்சங்களை அவர் கவனிக்காமவாதிகளின் கேஸையே தள்ளிவிட வேணுமென்று ஒரு மனுப் போட்டார்கள். சென்னை அட்வகேட் ஜனரல் ஆலயப்பிரவேசக் கக்ஷியாரின் வாதத்தை எடுத்துக் கூறிப் பேசினார். சட்டமானது, உள்ளே நுழைய அனுமதி கொடுத்து விட்ட மாத்திரத்திலேயே மற்ற அம்சங்களும் ஏற்பட்டு விட்டதாகக் கருத வேண்டுமென்றும், சட்டம் செய்தவர்களின் நோக்கத்தைக் கொண்டு பார்த்தால் அவர்கள் அறை குறையான நிலைமையில் ஆலயப் பிரவேசத்தை ஸாதித்துக்கொள்ள விரும்பியிருக்கமாட்டார்களென்றும், ஆதலால் சட்டத்தில் வியக்தமாயில்லாவிடினும் தீண்டாதார் எங்கு வேண்டுமானாலும் நின்று தர்சனம் செய்யத் தடையில்லையென்றும் வாதித்தார்.

ராவ் ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யரவர்கள் இதற்குப் பதில் கூறுகையில், சட்டமானது த்வஜஸ்தம்பம் தாண்டிச் செல்லமுடியாமலிருந்த தடையை மட்டும் நிவிர்த்தித்ததேயல்லது கோவிலில் அந்தந்த வகுப்பார் நிற்குமிடத்தைப் பற்றி ஒன்றும் புதியசட்டத்தில் இல்லாததால் ஏற்கனவே இருந்து வரும் வழக்கத்தை அது மாற்றவில்லையென்பது தெளிவாக தெரிவதாயும், சட்டத்தில் இல்லாத ஒரு அம்சத்தை யுக்தி வாதத்தால் ஸாதிக்க முற்படுவது நியாயமல்லவென்றும் வாதித்தார்

ஜட்ஜ கடைசியாக ஆலயப்பிரவேசக் கக்ஷியாரின் மனுவைத் தள்ளிவிட்டு ஏற்கனவே தாம் செய்த தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்து விட்டார். ஆதலால் இப்போது தீண்டாதார் உள்ளே சென்றாலும் மற்ற வகுப்பார் நின்று தர்சனம் செய்யுமிடத்தில் நிற்க முடியாதென்று ஜட்ஜியின் அபிப்பிராயமாயிருக்கிறது. அவர்கள் எங்குநின்று [illegible] முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

அர்த்த மண்டபத்தில் எந்த வகுப்பாரும் பிரவேசிக்க நியாய மில்லாதிருக்கையில் தீண்டாதார் அங்கும் பிரவேசித்து விட்டபடியால் அதற்காக கோவிலுக்கு சுத்தி ஸம்புரோக்ஷணம் நடத்த வேண்டியது அவச்யமென்பதை ஜட்ஜ் அங்கீகரித்து, அதன் செலவை யார் பொறுத்துக்கொள்ளுவதென்பதை முடிவு செய்ய உத்தேசிக்கிறார்.

இந்தத் தீர்ப்பானது ஆலயப்பிரவேசக் கக்ஷியாரின் ஆசை சிதைந்துபோகும்படி செய்யக்கூடியதாயிருப்பதால் அவர்கள் ஹைகோர்ட்டிற்கு ஓடியிருப்பதாகத் தெரிகிறது. அட்வகேட் ஜர்னல் அவர்களின் தூண்டுதலின் மேல் கவர்னர் ஓர் அவசரச் சட்டத்தை இயற்றி ஸப்ஜட்ஜியின் தீர்ப்பினால் ஏற்பட்ட ஸங்கடங்களை பரிஹரித்துக்கொள்ளும் உத்தேசமிருப்பதாயும் மதுரையில் பிரஸ்தாபிக்கப்படுவதாக அறிகிறோம். மேல்மேலும் நடக்கும் ஸம்பவங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருப்போம்.

காந்திஜியின் மாற்றுயோஜனை.

ஸர்வக்கக்ஷித்தலைவர் கூட்டத்திற்கு ஸம்மதிக்கிறார்

இந்திய ராஜீய நெருக்கடியைத் தீர்க்கப் பற்பலயோஜனைகள் சொல்லப்படுகின்றன. இந்தியாவிலுள்ள எல்லாராஜீயக் கக்ஷிகளின் தலைவர்களைக் கொண்ட ஓர் கூட்டத்தை நடத்தி யோஜனை செய்யலாமென்று சீமை பத்திரிகையொன்று சொல்லிய ஆலோசனையை காந்திஜி ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அந்தத்தலைவர்களின் பிரதிநிதிகள் ஓட்டுமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

கும்பகோணம் 54வது ஆண்டு ஸ்ரீ ராமநவமி உத்ஸவம்

கும்பகோணம் சோலையப்ப முதலியார் அக்ரஹாரம் ஸ்ரீராமபஜனை மண்டபத்தில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்திக்கு பிரமாதி௵ பங்குனிமீ 26உ (8—4—40) முதல் கர்போத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு விக்ரம சித்திரைமீ 9உ (21—4—40) ஞாயிற்றுக்கிழமை முடிய பிரதிவருஷம்போல் நடைபெற்றது. நடுக்காவேரி ஸ்ரீ ராமசாமிபாகவதர் அவர்களை பஜனைக்கென்று வரவழைத்திருந்தது. பாகவதர் அவர்கள் பக்தி சிறத்தையாய் சம்ப்ரதாயத்துடன் பிரதி தினமும் பஜனையை நடத்தினார். உத்ஸவ தினங்களில் பல சங்கீத கச்சேரிகளும் ஹரிகதா கால க்ஷேபங்களும் விகடக் கச்சேரிகளும் நடைபெற்றன. ஸ்ரீ ராமநவமி தினத்தன்று இரவு 8மணிக்கு மேல் பிர்ம்மஸ்ரீ பட்டம்வெங்கட்ராம பாகவதர் அவர்களால் லக்ஷ்மண சக்தி என்னும் ஹரிகதாகால க்ஷேபமும் நடைபெற்றது. ஸ்ரீ பட்டாபிராம மூர்த்திக்கு இந்த உத்ஸவத்தில் லக்ஷார்ச்சனை ஆரம்பித்தாயிற்று. 19-4-40 வெள்ளிக்கிழமை தினம் பிராம்மணசமாராதனையும் இரவில் வஸந்தகேளிக்கையும் நடந்தது. 21-4-40 ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேய உத்ஸவத்தை முன்னிட்டு பங்களூர் கதாரத்னம் ஸ்ரீ கிருஷ்ணபாகவதர் அவர்களால் ஆஞ்சநேய பிரபாவம் என்னும் காலக்ஷேபம் நடந்தது. கூடிய சீக்கிரம் சஞ்சீவிராவ் அவர்கள் வேணுகானத்துடன் விடாயாற்றி உத்ஸவம் நடைபெறும். டி. எஸ். பஞ்சபகேசய்யர்.

திருவாரூர் ஸ்ரீதியாகராஜஸ்வாமிக்கு 121 குடம் கங்கா தீர்த்த அபிஷேகம்,

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞா ஸ்ரீமுகப்படி பழ்னி, பிரும்மஸ்ரீ ஸுப்ரமண்ய சிவன் அவர்களால் திருவாரூர் ஸ்ரீ தியாக ராஜஸ்வாமிக்கு 121 குடம் கங்கா தீர்த்தம் தருவித்து விக்ரம௵ ஆனி மீ 22உ வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 121 வைதிகர்களைக்கொண்டு ருத்ர பாராயணம் நடத்தி ஆனிமீ 32உ தக்ஷிணாயன புண்ய காலத்தில் ஷை 121 குடம் தீர்த்தம் அபிஷேகம் செய்யப்படும். 12 தினங்கள் அன்னதானம் நடத்தப்படும். அன்னதானம் செய்து வைக்கச் சக்தியுள்ள பிரமுகர்கள் முன் வந்து நடத்திவைக்கவேணும். பொருளுதவி செய்யவிருப்பமுள்ளவர்கள் பழனி சிவன், 9 நெ. ஸன்னிதி தெரு திருவாரூர் என்ற விலாஸத்திற்கு அனுப்பவேணும். (ஒ. கி.)

ஸத்யாக்ரஹ ஆர்ப்பாட்டம்,

காந்திஜியின் தயக்கம்.

இந்தியாவில் ஸத்யாக்ரஹ இயக்கத்தை ஆரம்பிக்க காங்கிரஸ் கமிட்டிகள் ஆர்ப்பாட்டம் செய்து வருவது ஒருபுறமிருக்க, ஸ்ரீமான் காந்தி அதை ஆரம்பிக்கச் சீக்கிரத்தில் ஸம்மதியளிப்பாரென்று நினைக்க இடமில்லை.

தேசத்தில் கக்ஷிபிரதிகக்ஷிகளும், காங்கிரஸுக்குள்ளேயே பிளவும் அதிகரித்திருக்கும் நிலைமையில் ஸத்யாக்ரஹத்தை ஆரம்பிக்கத்தாம் தயாராக இல்லையென்று ஸ்பஷ்டமாக ஸ்ரீமான் காந்தி ஸமீபத்தில் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டு வெளியிட்டிருப்பதிலிருந்து ஸத்யாக்ரஹ இயக்கம் ஆரம்பிக்கவே இடமில்லாமல் போய்விடுமென்று நம்பப்படுகிறதாம்.

ஆலயப் பிரவேச வழக்கில் தீர்ப்பு.

தீண்டாதர் ஆலயப்பிரவேச நிவாரண வழக்கு ஜுலைமீ 5உ ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலஸ்ரீ திருஞ்ஞான பண்டார சன்னதி முதலான ஆறு பேர்கள் ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் தேவஸ்தானம் எக்ஸிகூட்டிவ் ஆபிஸர் ஆர். எஸ், நாயுடு பேரிலும் தமிழ் நாடு ஹரிஜன சேவக ஸங்கத்தின் அக்ராஸனர், காரியதரிசி முதலியவர்கள் பேரிலும் 6 தீண்டாதார்கள் பேரிலும் தீண்டாதார்கள் ஆலயப்ரவேசம் இனி செய்யக்கூடாதென்று தடை செய்யவும் இது வரையில் செய்ததற்காக மஹா ஸம்ரோக்ஷணம் செய்யும்படிக்கும் அதன் சிலவுகளுக்காக பிரதிவாதிகள் ரூ 3100/—. அவர்கள் கொடுக்கும்படிக்கும் இன்னும் இதர பரிஹாரங்களுக்காகவும் மதுரை ப்ரின்ஸ்பல் சப்-கோர்ட்டில் வழக்கிடப்பட்டு ப்ரதிவாதிகள் கக்ஷியாடி வருவதில் சென்ற 3—4—40ல் ஷை கோர்ட்டார் அவர்களால் சென்னை ஆலயப்ரவேச சட்டம் செல்லுபடி உள்ளதென்றும் ஆகிலும் ஷை வழக்கில் சில அம்சங்கள் சம்மந்தமாக விஜாரணை செய்யவேண்டுமென்றும் அதுகள் விஷயமாக ஷை பிரதிவாதிகள் தங்களுக்குள்ள கேஸைகண்டு ஒரு ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமென்றும் உத்திரவு செய்யப்பட்ட விபரம் ஏற்கனவே இந்த பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

மேலேகண்ட உத்தரவை புனராலோசனை செய்ய வேண்டுமென்று பிரதிவாதிகளால் பிறகு மனு கொடுக்கப்பட்டதன் பேரில் அம்த மனுவை கோர்ட்டார் அவர்களால் இரங்கிக்கு எடுக்கப்பட்டதில் பிரதிவாதிகளுக்காக சென்னை அட்வகேட் ஜெனரல் ஸர். அல்லாடி கிருஷ்ணஸாமிஅய்யர் அவர்களும் எதிர் திரப்பில் வாதிகளுக்காக ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களும் தங்கள் தங்கள் கக்ஷிகளை எடுத்துத் தெரிவித்தார்கள். அதின் பேரில் கோர்ட்டார் அவர்கள் நாளதுமீ 25உ தினம் ஷை மனுவின் பேரில் ஒரு விரிவான உத்திரவை செய்தார்கள்.

மேற்கண்ட உத்தரவின் சாராம்சம் பின்வருமாறு :— அட்வகேட் ஜெனரல் அவர்கள் மூன்று விஷயங்கள் முக்யமாக வற்புறுத்தியிருக்கிறார். முதலாவது ஆலயப்ரவேச சட்டம் செல்லும்படி உள்ளதென்று கோர்டாரவர்களால் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற ஸ்திதியில் தீண்டாதார்கள் கோவிலில் கெற்ப க்ரஹம் நீங்கலாக மற்ற எல்லா பாகங்களிலும் சென்று சுவாமி தர்சனம் செய்ய உரிமையுண்டு. இரண்டாவது ஷை சட்டத்தில் 5-வது பிரிவுபடி இந்த வழக்கில் கேட்டிருக்கும் எல்லா பரிகாரங்களும் கேட்க வாதிகள் தடைப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவது இந்த வழக்கில் கேட்டிருக்கும் எல்லாப் பரிகாரங்களும் தீண்டாதார்கள் கோவில் முற்றிலும் ப்ரவேசிக்க பாத்தியம் இல்லை என்கிற வாதியின் கேஸைப் பொறுத்து கேட்கப்பட்டிருக்கிறதே ஒழிய சில பாகங்களில் போகவும், சில பாகங்களில் போகக்கூடாதென்றும், உள்ள கேஸைப் பொறுத்தல்ல. ஷை வழக்கு கிளம்பத் தகுந்ததில்லையென்றும் இந்த ஸ்திதியில் கோர்ட்டாரவர்கள் பிரதிவாதிகளை விபர ஸ்டேட்மெண்டு கொடுக்கும்படி உத்திரவு செய்திருப்பது …
றும் சொல்லுகிறார்.

சென்னை ஆலயப்ரவேச …
படுவதற்கு முன் ஷை கே…
தீண்டாதார்கள் ப்ரவேசிக்…
றும் விலக்கப்பட்டவர்கள் …
தொட்ட காலமாக ஒரு வழ…
வருகிறதென்பது ப்ரதிவாதிக…
கொள்வதுமல்லாமல் ஷை சட…
றும் நிதர்சனமாகிறது. மற்றொ…
தொன்று தொட்ட காலமுதல் …
னத்தில் இருந்து வந்திருக்கிற…
வென்றால் சிவத்வஜர்கள் கே…
கெற்ப க்ரஹத்திலிருந்தும். பிரு…
அர்த்தமண்டபத்திலிருந்தும், …
வைசிய, சூத்திரர்கள் மஹாமண்ட…
ருந்தும், நடிகர்களும் பாடகர்களும…
திய மண்டபத்திலிருந்தும் தர்சி…
என்பதாகும்.

சென்னை ஆலயப்ரவேசசட்டம் எ…
மேலேகண்ட முதலாவது வழக்க…
ரத்து செய்துவிட்டதாக வைத்துக்கொ…
டாலும் மேலேகண்ட இரண்டாவது வ…
கத்தை ரத்து செய்து விட்டதாக ஏற்…
கூடியதல்ல. ஆகையால் மேல்க…
இரண்டாவது வழக்கத்துக்கு ஒத்…
மாக ஷை சட்டத்தின் 3-வது பிரிவு…
தீண்டாதார்களுக்கு ஏற்படுமே ஒ…
வேறில்லை. அவ்விதம் ஷை வழக்கத்து…
ஒத்த விதமாக ஷை உரிமையை பரிசீல…
செய்வதில் த்வஜ ஸ்தம்பத்திற்கு உள் ப…
கத்தில் நான்கு வர்ணத்தார்களுக்கும் பி…
இருந்து தீண்டாதார்கள் தர்சனம் செய்…
தாவது குறைந்த பக்ஷம் அவர்களுக்…
உரிமை உண்டென்று அட்வகேட் ஜெ…
ரல் சொல்லும் கக்ஷி சரியென படுகி…
[illegible]
முண்டா என்ற விஷயமானது இந்த தாவாவில் விஜாரணையின் பேரில் முடிவு செய்ய வேண்டிருக்கிறது.

எந்த விதத்திலும் சென்னை ஆலயப்பிரவேச சட்டமானது 1939ஜுலைமீ 8உ முதல் ஷை சட்டகாலம் வரையில் நடந்த ஆலயப்ரவேச விஷயமான எவ்வித ஸம்பவங்களைப்பொறுத்தும் யாதொரு நடவடிக்கையும் நடத்தக் கூடாதென்று ஏற்படுத்தியிருக்கிற ஸ்திதியில் அந்த ஸம்பவங்களைப் பொறுத்து இந்த தாவாவில் நஷ்டங்களுக்காவது இன்சங்ஷன் முதலி பரிஹாரங்களுக்காவது கேட்டிருப்பது செல்லக் கூடியதில்லை. என்பது வியக்தமாக ஏற்படுகிறது.

மேலே கண்டபடி கெற்பக்ரஹத்துக்கு உள்பக்கத்தில் நாங்குவர்ணத்தார்களுக்கும் பின்னால் இருந்து தர்சனம் செய்யும் பாத்யம் மாத்திரம் தீண்டாதார்களுக்கு உண்டு என்று பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அதைப்பொறுத்தும் பரிகாரங்களாவது கிடைக்காது.

ஆனால் அவ்விதம் பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. அதற்கு மேற்பட்டு தீண்டாதார்களுக்கு உரிமை உண்டென்று கக்ஷியாடுவதால் இந்த தாவா நிற்கத்தகுந்ததுதான் அதாவது தீண்டாதார்களுக்கு கெற்பக்ரஹம் நீங்கலாக கோவிலில் மற்ற யாவத்துபாகங்களிலும் நான்கு வர்ணத்தாருடைய தடையன்னியில் போய்தரிசனம் செய்ய உரிமையுண்டா அல்லது அவர்களுக்கு இடைஞ்சல் அன்னியில் பின்னால் இருந்து மாத்திரம் தரிசனம் செய்ய உரிமையுண்டா என்கிற விஷயத்தை விசாரணை செய்ய எவ்வித குந்தகமுமில்லை என்று ஏற்படுகிறது.

ஆகையால் என்னால் ஏற்க…
(3—4—40)ல் செய்யப்பட்… உத்…
ஆலோசனைக்காக குறிக்கப்பட்டிரு…
விஷயங்கள் சரியானதுதான் என்று…
படுகிறது. ஆகையால் அந்த விஷயங்…
பற்றி விசாரணைக்காக வருகிற ஜுலை…
5உ குறிப்பிட்டிருக்கிறேன். ஜி.வ்…

…
இதைநடத்த முன்வருவ…

ஆமோதநஸபை !! ஸ்ரீ ஜ…
பாதாள் உபநயநவிஷயமாக …
உபதேசத்தை அன்னையூர் தி…
முதலிய விடங்களில் அமரகலா…
பைத்தலைவர் எடுத்து கூற பலர் …
ஆமோதித்தனர் விவாஹவிஷயத்தி…
இங்ஙனம் ஓர் மார்க்கம் காட்டுப்…
மஹாஸன்னிதாநத்தைச் சபை வேண்…
கொண்டது !

மதுரையுவஜநஸங்கம்வாழி !! ஷை…
யார் உலகக்ஷேமத்திற்காக ஸா-மவே…
யணம் செய்து வருகின்றனர் ! அது…
யாகும் திநமான புதனன்று … கீ…
சேஷரான பிரும்மஸ்ரீ ம. ம. …
சாஸ்திரிகளது படத்தையும் தி…
கின்றனர் !!

தர்மப்ரசாரம் !! அமரகலா…
ஸபைதலைவர் நாளது செவ்வாய…
குன்னம், வியாழன் மாயவரம் …
திருவாலூர், முதலிய விடங்களில் …
செய்து பின்னர் எந்தெந்த விடத்…
அழைப்பு வருகிறதோ, அங்கு…
ப்ரசாரம் செய்வர் !!

ஸ்காந்தம் !! திருக்கோவிலூர் …
ஸபையினதரவில் மே-மீ 10உ …
ஸ்ரீ ஸ்காந்த ப்ரவசநம் நடைபெறும்…

திகாரி பிரசாரம்.

ஹாமஹக்குளம்.

குளம் பிர்க்கா ஸ்ரீஜகத குரு
ய ஸ்வாமிகளின் ஸ்ரீ மடம்
ஸ்ரீ N. S. ராஜம்பய்யர், பிரமா
க்ஞைப் பிரசாரம் சென்ற பங்
திலும் இந்த சித்திரை மாதத்தி
ாசி விசுவநாதஸ்வாமி ஸன்னதி
3—40லும் 7—4—40 14-4-40
மகாமககுளத்தெருவில் உள்ள
கனால் மீட்டிங் கூடி ஸ்ரீ பர
ரின் ஆஞ்ஞைகளை முறையேமும்
ரம் படித்துக் காட்டியும் வருஷப்
கழிந்ததும் வசூலித்திருந்த ஸ்ரீராம
க்ஷதை முடிச்சுகளையும், பசுவின்
பயும் வருஷப்பிறப்புக்கு முன் வசூ
ந்த அக்ரஸம்பாவனையையும் ஸ்ரீமட
கொண்டுபோய் சேர்த்தப்பட்டது.

—4—40ல் ஸ்ரீ காசி விசுவநாதஸ்வாமி
யில் பிரகாரத்திலுள்ள புல் பூண்டு செடி
யும் அக்ரகாரத்திலுள்ளவர்களோடு
லூர் வெங்கிட்டராமய்யர் தாங்கள் தலை
யில் எல்லாரையும் அழைத்துக்கொண்டு
ய் பிடுங்கி அப்புறப் படுத்தப்பட்டது.

N. S. ராஜம்பய்யர்,
முத்ராதிகாரி, மகாமககுளம்,

தங்குடி

ரவேசவைபவம்

ஞாயிற்றுக் கிழமை
க்கு நன்கு அலங்கரிக்கப்
பபல்லக்கில் ஸ்ரீ ஆவணி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்
ஸ்வாமிகளவர்கள் வீற்றிருந்து வேத
த்துடன் பாண்டுமேளதாள முழங்க
வேடிக்கையுடன் பக்தகோடிகள்
சூழ பட்டணபிரவேசம் வந்து இறு
இரவு 1மணிக்கு பாடசாலை அடை
ர். பக்தகோடிகள் தங்கள்
இல்லங்களுக்கு முன் மகரதோ
அலங்காரம் செய்து பூர்ணகும்பம்
தி எடுத்து மாலைகள் ஸ்வாமி
ம ரிவித்து காணிக்கைகள் சுமர்
ப்பிரல் 24, 25, தேதிகளில்
ல குரு ஆராதனை நடைபெற்
செவ்வாய்க் கிழமை காலை
யர்கள் பள்ளத்தூருக்கு விஜய
இவ்வூரிலும் பக்கத்து ஊர்க
ல மழை பெய்து சுபிக்ஷமாயி
(ந. நி.)

கிக்குப் பணஉதவி

ஸ்தபானங்கள் செய்யக் கூடாது

ன்னை ஸர்க்கார் உத்திரவு

ா கவர்ன் மெண்டார் வெளியிட்
ஓர் உத்திரவில், முனிஸிபாலிடி,
போர்டு, பஞ்சாயத்து ஸபை முதலி
துருக்கி முதலிய வெளி நாடுகளின்
வாரண உதவிக்காகப் பணம் கொடு
டாதென்று சொல்லியிருகிறுர். பண
அளிப்பதாக இது வரையில் தீர்மானி
சில ஸ்தல ஸ்தாபனங்களுக்கு
உத்திரவில் விலக்கு அளித்துள்

சோலையப்ப முதலித்தெரு

ஆக்ஞை பிரகாரம் 18-4-40 ஏகாதசி
ன்று ஷை அக்கிரகாரம் ஸ்ரீ விசாலாக்ஷி
ம்மன் சன்னதியில் இரவு 8மணி முதல்
பங்களூர் பிர்மஸ்ரீ கிருஷ்ண பாகவதர்
வர்களால் ருக்மாங்கத சரித்திரம் கதா
கால க்ஷேபம் நடைபெற்றது அது சமயம்
சுமார் 500 ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

வருஷபிறப்பன்று ஷை அக்கிரகாரர்களால் கொடுக்கப்பட்ட ஸ்ரீ ராம நாம ஜெப அக்ஷதை முடிச்சு, யும் அத்துடன் கிடைத்த அக்ஷதை மரக்கால், யும் ஸ்ரீ மடத்தில் கொண்டு போய் சேர்க்கப் பட்டது.
வருகிற 3-5-40 வெள்ளிக்கிழமை ஏகாதேசியை முன்னிட்டு ஆக்ஞை பிரகாரம் ஷை தெரு ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் மாலை 6மணி முதல் ஆங்கரை பிர்மஸ்ரீ ரெங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் துருவ சரித்திரத்தை உபந்யஸிப்பார்கள். அது சமயம் யாவரும் விஜயம் செய்து கதா சிரவணம் செய்யும் படி பிராத்திக்கிறேன்.

S. சுப்பிரமணிய அய்யர்
ஸ்ரீ மடம் முத்திராதிகாரி.

தார்மிக யுவர்சங்கம்

நாகனுதபுரம்

ஸ்தாபன கூட்டம்

(24—4—40)உ மாலை 5மணிக்கு ஷை சங்கத்தை ஸ்தாபனம் செய்வதற்காக சகஸ்ரநாம பாராயணத்துடன் ஊர்வலம் வந்து ராமசாமி அய்யர் வீட்டின் முன் புதியதாக அமைத்திருந்த கொட்டகையில் ஷை கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஆத்தங்குடி ஸ்ரீமான் டி. பி. ஜெகதீச்வரய்யர் தலைமை வகித்தார்கள்.

தலைவர் பேசும்போது வாலிபர்கள் தான் எந்த காரியத்தை செய்ய முயற்சி செய்தாலும் ஜெயம்பெற கூடியவர்கள். ஆகவே வதசு சங்கத்துக்கு ஒத்துழைக்க இச்சங்கத்து வாலிபர்கள்தான் என்றும் யுவர்கள் அனைவரும் வர்ணாஸ்ரம தர்மத்தை கைபற்றி ஒழுகவேண்டியது அவசியமென்றும் தற்காலம் காங்கிரஸ் ஜனங்களை ஏமாற்றி வருவதை விளக்கியும் 2½மணிநேரம்வரை சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் காரைக்குடி வ சு சங்க காரியதரிசி ஸ்ரீமான் எஸ். வெங்கிடாசாரியார் வாலிபர்களின் கடமையை பற்றியும் ஆத்தங்குடி தமிழ் வித்வான் சாமிநாத அய்யர் ஒழுக்கம் என்பது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

பின்னர் கோவிலூர் வ. சு. சங்ககாரியதரிசி கே. எ. ராமசாமியும், காரைக்குடி எஸ் ராமசாமி அய்யங்காரும் சொற்பொழிவாற்றினார்கள் பின்னர் கீழ்கண்டபடி ஷை சங்கத்துக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்கபட்ட விபரம் தலைவர் கிருஷ்ணகனபாடிகள். உபதலைவர் காரியதரிசி சுந்தரம் நிர்வாக மெம்பர்களாக சீனிவாசன் மீனாக்ஷிசுந்தரம் பி. சுப்பிரமணியன் பிச்சுமணி தேர்த்து எடுக்கப்பட்டது கடைசியாக சில தீர்மானங்களும் நிறைவேற்றபட்டன.

கடைசியாக யாவருக்கும் கோவிலூர் K. A. ராமசாமி வந்தனோபசாரம்கூற கூட்டம் இனிது கரகோஷத்துடன் நிறைவேறியது.

சுந்தரம்
காரியதரிசி

கும்பகோணம்

மாணவர்கலைஞான ஸங்கத்தின்

[illegible] நிறைவுவிழா

கும்பகோணம் ரெட்டியார் குளத்தங்கரை தெருவில இச்சங்கத்தின் ஆதரவிலும் இத்தெருவாஸியான ஸ்ரீ மான் ஸ்ரீனிவாஸ ராவ் முதலியவர்களுடைய பேராதரவிலும் இந்நகரின் பலபாகக்களிலும் ஹரிகதா காலக்ஷேபங்களை செய்து வந்த ஸ்ரீ மான் பெங்களூர் கிருஷ்ணபாகவதர் அவர்களால் தெருவில் அமைக்கப்பட்டிருந்த பெரியதொரு பந்தலில் அடியிற்கண்ட ஹரிகதா காலஷேபங்கள் நடத்தப்பட்டுவந்தன.

பிரகலாத, புரந்தரதாஸ், ராஜஸூயயாகம், த்ரௌபதி கல்யாணம் முதலிய ஒவ்வொரு ஹரிகதையும் வெகு சிலாக்யமாக செய்யப்பட்டது அனேக பிரமுகர்கள் பிரபல மிராசுதார்கள், வக்கீல்கள், பல பண்டிதர்கள், பல உத்யோகஸ்தர்கள் குழுமி வந்திருந்தனர். ஸ்திரிகளுக்கு வேறு புருஷர்களுக்கு வேறு வசதிகள் வகுக்கப்பட்டு சிறுபையன்கள் அனேகர் வாலண்டியர்களாக நின்றனர். மகாஜனங்களிடமிருந்து சுமார் ரூ 70 வரையில் வசூலாகி திரௌபதி கல்யாணத்தின் போது ஷை சங்கத்தின் செகரடரியான ஸ்ரீ வாதிராஜன் என்றுன் மாணவனல் நன் கொடையாளர்களின் ஜாபிதா வாசிக்கப்பட்டு சன்மானம் அளிக்கப்பட்டது. மகாமகோபாத்யாய ஸ்ரீ மான் ஆர். வி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் தெருவாசிகளின் சார்பாக வந்தனோபசாரம் கூறினர். மாணவர்களின் சார்பாக பிர்ம்மஸ்ரீ எம். ராமராவ் அவர்களின் குமாரனை ஸ்ரீ. ஆர். நரஸிம்மாசாரியாலே வந்தனமளிக்கப்பட்டது பாகவதர் சிறுவனின் சொல்வன்மையை புகழ்ந்து அடுத்த வருஷத்தில் இம்மாதிரி பல சிறுவர்கள் தைர்யமாய் பேச முன்வரவேண்டு மென்று ஆசிர் வதித்தார் என்று சங்ககாரியதரிசி அறிவிக்கிறுர்.

கடவுள் ஒருவரே.

ராமேச்வரம் ஸனாதந மகாநாட்டின் உபசரணை கமிட்டி தலைவரும், யூனியன் போர்டு தலைவருமான ஸ்ரீமான் பீமசங்ர பட்டர் அவர்கள் செய்த பிரஸங்கம் :—

நம்வைதிகதர்மத்தை நிலைநிறுத்த அவதாரம் செய்த பரமாசார்ய புருஷர்களுக்கு உகந்த புண்யபூமியான நம் பரதகண்டத்தில் நீண்டகாலமாகவே தர்மத்வேஷிகள் தோன்றுவதும், தர்மாபிமானிகளிடம்அன்பு கொண்ட இறைவனவதரித்து தர்மத்வேஷிகளை நிக்கிரஹம் செய்து தர்மாபிமானிகளை காப்பதென்பதும் சரித்திரபூர்வமாய் நன்கு அறியக்கூடிய விஷயமே. ஆயினும் தர்மாபிமானிகள் விடாமுயற்சியுடன் எம்மட்டிலும் தர்மத்தை கையாண்டு வருகின்றார்கள், பிரசாரவழியில் ஈடுபடுகின்றார்கள் என்பதை சோதிப்பதும் ஈசன்திருவிளையாட்டே ஆகையால் தர்மாபிமானிகள் ஆங்காங்கு மஹாநாட்டை நடத்துவதின் மூலம் நம்வைதிக தர்மத்தையும் அதன் பெருமையையும் எல்லோருமுணருமாறு செய்யவேண்டும். மேலும் புறமதத்தினர் நம்மக்களை பல்வேறு வழியில் நயவஞ்சகமாய் மோசம் செய்வதால் இவர்களும் ஏமார்ந்து அவர்கள் வலையில் சிக்கி அவர்கள் மதத்திலும் சேர்ந்து கொடிய கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர். இவ்விதம் நம் ஹிந்து ஜனங்கள் பல காலமாய் புறமதத்தினரால் ஆக்கிரமிக்கப்படுவதைப்பார்த்துக் கொண்டிருப்பது கொடிய பாதகமாகுமென்பதே என் உண்மையான அபிப்பிராயம். இதைக்கற்றறிவு பெற்ற கல்விமான்களான நான்கு வர்ணத்தார்களும் விசேஷ ஊக்கம் கொண்டு ஆதித்திராவிடர் முதலிய படிப்பில்லா எல்லாமக்களும் கேட்டுத் திருந்துமாறு பொதுக்கூட்டம் முதலியனவைகளால் ஏற்பாடு செய்யவேண்டியது மிகவும் அவச்யம். புறமதத்தினர்ஏமாற்றும் வழி ஒருபுறமிருக்க அவர்கள் நம்மதத்தில் குறைகூறுவதே கேவலமாயிருக்கிறது, இந்துமதத்தில் பல தேவதைகள் இருப்பதால் ஒவ்வொன்றாய் வழிபடுவது முடிந்த கார்யமில்லை. மோக்ஷ மடையவும் முடியாது என்கிறார்கள்.

இவர் மதத்தில் ஒரே தேவதையாம்! அதை உபாஸிப்பதும் மோக்ஷமடைவதும் சுலபமான வழி என்று பிரசாரமும் செய்ய ஆரம்பித்து விடுகின்றார்கள். இவர்களுக்கு பதில் கூறுவது பெரிதல்ல, அவ்வளவு பெரிய விஷயமுமல்ல, ஆயினும் நம் சகோதரர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் சமாதானம் கூறவேண்டியது மிகவும் அவச்யமானதே. வைதிக மதமென்னும் சனாதன இந்து மதத்தில் பல தெய்வங்கள் உண்டென்பதை நிரூபிக்க இவர்களால் இயலாதென்பது நிச்சயம். ஆயினும் இவ்வறிவீனர்களை ஒருவார்த்தை கேழ்க்க வேண்டியது மிகவுமவச்யமாயிருக்கிறது. அது யாதெனில், இந்துதெய்வங்கங்களில் எந்த தெய்வத்தை உபாஸித்து அந்த தெய்வம் இவர்கள் முன் தோன்றி நாங்கள் பல தெய்வங்களிருகிறோம். எங்களெல்லோரையும் தனித் தனியாக உபாசிக்க வேண்டும். அவ்வித முபாஸித்தலல்லது என் ஒருவனால் உன் இஷ்டத்தை பூர்த்தி செய்ய முடியாது. எல்லொரும் சேர்ந்து செய்யவேண்டிய வேலையாகும் அது என்று கூறியது. இதை நிரூபணம் செய்ய எவனாலும் முடியுமா? ஒருவராலும் ஒருக்காலும் நிரூபணம் செய்ய முடியாதென்பதுநிச்சயம். பிறரை ஏமாற்றுவதற்கு இது ஒரு சூது வார்த்தையே.

நம் மதத்தலோவென்றால் கடவுள் ஒருவரே இதை வேதங்கள் வற்புறுத்தி, கூறுகின்றது ஏகமேவாத்விதீயம் பிர்ம்ம, ஏகேதேவஸ்ஸர்வ பூதேஷு கூட: ஏகோஹி ருத்ரோநத் விதீயாயதஸ்தே, ரூபம் ரூபம்பிரதி ரூபோபபூவ, ஏகோ வர்ணோபகு தாசக்தியோகாத்வர்ணனனே கான்நிகி தார்தோததாதி, இது போன்ற பல வசனங்களால் கடவுள் ஒருவரென்றும் அவ்வொருவரே உபாஸிப்பவரின் மனப்பக்வத்திற் கேற்றவாறு பலரூபமாக தோன்றுகிறார் என்பதும் பலயுக்திகளினால் நிரூபணம் செய்யப் பட்டிருக்கிறது. இவ்விதமிருக்க எந்த பிரமாணவசனத்தைக் கொண்டு இவ்விதம் கூறுகின்றார்கள் அறியாதாரை ஏமாற்றும் தொழிலைத் தவிர வேறல்ல மேலும் அவர்களை நாம் ஒரு வார்தை கேட்போம் ஒவ்வொரு மதத்திற்கும் வெவ்வேறு கடவுள் இருக்க முடியுமா அவ்வித மிருக்குமானால் உலக மனமதியடையுமா பல அரசர்களைக் கொண்ட பூமண்டலத்தில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு உலகமக்கள் படும் துயரத்தை நாம் பிரத்யக்ஷமாய் காணவில்லையா? மனித அரசர் மூலம் நடக்கும் சச்ரவிலேயே இவ்விதமிருக்கு மானால் பலமதக்கடவுள் வெவ்வேறாக இருக்குமானால் உலகமமைதியடையமுடியுமா? உலகசிருஷ்டிதான் நடைபெறுமா? இது விஷயங்களை நன்கு ஆலோஜித்தால் எல்லாமதத்தினருக்கும் கடவுள் ஒருவரென்று நன்கு விளங்கும். எல்லா மதத்தினரும் கடவுளினின் குணங்களை கூறு மளவில் எங்கும் நிறைந்தவர், ஆக்கல், அழித்தல் படைத்தல் என முக்கார்யங்களையும் செய்வரென்னும் மற்றும் பல அறியகுணங்களைக் கூறுகின்றார்கள் ஒவ்வொருமதத்திற்கும் பலவேறு கடவுள் இருந்தால் ஒவ்வொரு கடவுளையும் எங்கும் நிறைந்தவர் என்று எவ்வாறு கூறமுடியும்? ஒரு கடவுளில்லாத இடத்தில் அல்லவோ மற்றொரு கடவுள் இருக்கவேண்டும். ஒரு மனிதனுக்கு போதுமான இடத்தில் பல மனிதங்கள் எவ்வாறு இருக்க முடியும் அவ்விதம் பலாத்காரமாய் இருந்தால் அனர்தம் விளையுமேயல்லாது நன்மை ஏற்படுமாவென்பதை ஆலோஜிக்க வேண்டும் மேலும் ஒரு கடவுள் இடத்தில் மற்ற கடவுளில்லை. வெவ்வேறு இடங்களில் இருத்தல் வேண்டும் அவ்விதமிருப்பின் கடவுள் எங்கும் நிறைந்தவரென்று கூறியது பொருத்தமற்கலாம், நமது இந்து மதம் எக்காலத்தில் யாரால் ஏற்படுத்தப்பட்டதென்பதை இதுவரையிலு எவராலும் திண்ணமாய் கூறமுடியவில்லை என்பது எல்லோருமறிந்த விஷயம் மற்றமதங்களை ஏற்படுத்தியவர்கள் குறிப்பிட்டகாலத்தில் மானிடராய் பிறந்து மனிதபுத்திக்கு எட்டியவாறு ஊகித்து கல்பிக்கப் பெற்றமதமென்பதும் மறைக்கமுடியாது. அனாதிகாலம் தொட்டு எவ்வித மாறுதலடையாததும் கடவுளின் ஆஞ்ஞையான வேதத்தையே பிரமாணமாகக் கொண்டதுமான இந்து மதமே மிகச்சிறந்த தென்பதில் சிறிதேனும் ஐயமுண்டோ? இல்லவே இல்லை. இக்காலத்தில் காந்தியார் மதம்பரவி அதை நம் சகோதரர்கள் நம்பி எவ்விதம் மோசம் போனார்களோ? தாங்கள் மோசம் போனது மன்றி பிறரையும் மோசமடைய பல சூழ்சிகளைச் செய்து வருகிறார்களோ அதே போல முன் காலத்திலும் இப்புறமதத்தலைவர்களும் அதை பின்பற்றி ஏமாற்றமடைந்தவர்களும் உலகமக்களை பலாத்காரம் முதலிய பல சூழ்ச்சிகளால் நம்சகோதரர்களை ஏமாற்றி விடுகிறார்கள். மற்றோர் வழியினும் நம் மதமே சிறந்ததென்பது தெளிவாகும்.

அது என்ன வென்றால், எப்பொழுதும் உலகத்தில் உண்டானவஸ்துக்களில் சிறந்து விளங்கிவரும் வஸ்துவானது காலவளவில் பழுதாகிவிடும், பழதானவஸ்துவை புதிதாக்க முடியாது. எவ்விதமென்றால் ஒரு பீதாம்பரம் பழுதாகிவிட்டால் பழுதேயாகும்.

ஆகையால் கடவுள் எல்லோருக்கும் ஒருவரென்றே கண்டிப்பாய் ஏற்றுக்கொண்டே தீரவேண்டியதாயிற்று. இவ்விதமிருக்க எம்மதத்தை பின்பற்றி நாம் நன்மை அடைவது என்ற சந்தேஹமுதிக்க நியாயமில்லை.

பின்னும் உயர்ந்தபொருள் சின்னமனிதனுக்கு கிடைத்தால் ஆவலுடன் எடுத்துக்மாகின்றதோ இல்லை,மானவஸ்துவை பெரிய மனிதன் லெக்ஷ்யம்செய்வானா? அதேபோல் இந்துமதத்தினரைபுறமதத்தினர் ஆவலுடன் வரவேற்று தன் இனத்தார்களோடு சேர்க்கின்றார்கள். புறமதத்தினரை இந்துகள்சேர்பதில்லை,ஏன்? சிறந்ததான இந்து மதத்தில் புறமததினர் சேர அர்கதை அற்றவர்களென்றே காரணமாகும். ஆகையால் இதுபோன்றபல யுக்தியைக் கொண்டாலும் இந்துமதமே மிகச்சிறந்ததும் புனிதமான தென்பதும்கடவுளின் அன்புக்கு உகந்த தென்பதும் தெளிவாயிற்று. இது போன்ற பல உபதேசங்களால் நம் இந்துமக்களான ஆதித்திராவிடர்களை புறமதத்தினரிடமிருந்து பாதுகாப்பது நான்கு வர்ணத்தாருடையவும் கடமையாகும் இதை விட்டு நமக்குள்ளேயே பிராம்மணர் அப்பிராம்ணர்கள் என்ற கலஹத்தை ஏற்படுத்திக் கொண்டு பிளவுபட்டால் வீட்டிலுள்ளோர் சண்டையிட்டுக் கதவை திறந்து போட்டால் அயர்ந்திருக்கும் சமயம் உள்நுழைந்து பொருளை அபஹரிக்கும் பிராணிகள் போல் புறமதத்தினர் புகுந்து நம் இந்து மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள். இதனால் ஏற்படும் நஷ்டம் யாரைச் சேர்ந்தது? நம் சமூகத்தைசேர்ந்ததென்பதை நன்கு ஆலோஜிக்க வேண்டுமாய் கோருகின்றேன்.

(தொடரும்)

ஸ்ரீ அகில பாரதீய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கம்

மதுரை டவுன் மஹா ஸம்மேளன ஊர்வலம்

விக்ரம-ஹு சித்திரைமீ 19ம் தேதிக்கு (1—5—40) புதன்கிழமை மாலை 4½ மணிக்கு மதுரை தமிழ் சங்கம் ரோட் 55-நிர் பங்களாவில் அமைத்திருக்கும் ஸனாதன தர்ம வித்யாலயத்திலிருந்து ஓர் ஆஸ்திகமகா ஜனங்களின் மாபெருங் கூட்டம், வேத பாராயணங்களுடனும் தேவார திருவாசக திருப்புகழ் பஜனை கோஷ்டிகளுடனும் பாண்டு வாத்யங்களுடனும் குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹத்தையும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரன் படத்தையும் வாஹனங்களில் அலங்கரித்து ஊர்வலமாய் பவனிவந்து சுமார் மாலை 7 மணிக்கு கிருஷ்ணாராயர் தெப்பக்குளம் என்ற திலகர் சதுக்கத்தில் வந்துசேரும். அச்சமயம் ஓர் மஹாஸம்மேளனம் அன்றைய தினமும் மறுநாள் வியாழக்கிழமை யன்றும் அவ்விடம் நடைபெறும். திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், தஞ்சாவூர், தென்னார்காடு முதலான தமிழ் நாட்டிலிருந்து அநேக பிரமுகர்கள் ஆயிரக்கணக்காக விஜயம் செய்து ஸ்வதர்மத்தோடு கூடிய ஸ்வராஜ்யம் கிடைக்குமாறு கலந்துகொளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒலி பரப்பும் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது.

ராவ்சாஹிப் என். நடேச அய்யர்,

வெளியூர் செய்திகள்

ஆழ்வார்திருநகரி

ஸனாதந தலைவருக்கு மரியாதை

ஆழ்வார் திருநகரி சனாதனதர்ம ஸபாத் தலைவர் ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார்கோயிலில் பல உத்ஸவசந்தர்பங்களிலும் விசேஷமரியாதை வகையரு ஏற்பட்டு நடைபெற்றுவருகிறது. மாஜி காங்கிரஸ் மந்திரி ஆட்சியில தீண்டாதார் ஆலயப்ரவேசக் கிளர்ச்சி மும்மரமாயிருக்கையில் ஸ்ரீரங்கம் கோயிலைப்போன்று இந்நகர் தேவஸ்தானத்திலும் நவீனகர்கள் ஆர்பாட்டம் மிகத்தீவிரமாயிருந்து வந்தது சனாதனத்தலைவரான ஸ்ரீமத் ஸ்வாமிகள் பெருமுயற்சியாலேயே விஷமிகள்கிளர்ச்சி பலிக்காமல் போனதாய்ச் சொல்லப்படுகிறது. இவ்வூர் கோயிலுக்கு தீவிரகாங்கிரஸ் வாதி தீண்டாதார் ஆலயப்ரவேசத்தை நடத்திவைக்க எதையும் செய்யத்தயாராயுள்ள ஒருவர் எக்ஸ்கூடிவ் ஆபீஸராயிருந்து வருகிறார். மேற்படியார் கோயில் நிர்வாஹ ஆபீஸர் என்ற நிலையில் பொதுவான நோக்குடன் நியாயமாக நடத்துவர வேண்டியதைவிட்டு சனாதன தர்மிகளிடம் குரோதமான முறையிலேயே காரியங்களை கவனித்து வருவதாய்க் கூறப்படுகிறது.

ஸ்ரீமத் ஆத்தான்ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள மரியாதைவகையருக்களை எவ்வித காரணத்தையிட்டும் கட்டுப்படுத்தாமல் ஒழுங்காய் நடத்தி வைக்கவேண்டுமென சென்னை எண்டோமெண்ட் போர்டார்களால் சமீபத்தில் ஓர் ஆர்டர் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

சனாதனத்தலைவர் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆதீனம் ஏஜண்டு ஸ்ரீமான் ஆசாலுவய்யங்காரால் மதராஸ் அட்வோகேட் ஸ்ரீமான் டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் மூலம் சென்னை தேவஸ்தான போர்டில் ஓர் பெட்டிஷன் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாயும் அதில் காங்கிரஸ் வாதியான ஆலயநிர்வாஹ ஆபீஸர் பொதுவான நோக்கமின்றி கக்ஷிக்காரர் போல் நடந்து வருவதாய்க் குறிப்பிடப்பட்டிருப்பதாயும் தெரிவதுடன் அதன் பேரிலேயே ஒழுங்காய் நடக்கமாறு நிர்வாஹ ஆபீஸருக்கு போர்டார் கட்டளை பிறப்பித்ததாயும் தெரிகிறது.

ந. நி.

ஆழ்வார் திருநகர் ஸனாதன ஆஸ்திக மாதர்சங்கம்

ஆலயப்ரவேச கண்டனம்

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரி சனாதன ஆஸ்திக மாதர் சங்கத்தினாதாவில் பிரதிபுதனன்றும் ஆஸ்தீகஸ்திரீகளின் கூட்டம் நடைபெற்று வருகிறது பல பெண்மணிகளும் ரமணீயமாய்ப் பேசிவருகின்றனர். சென்ற புதன்கிழமை நெல்லூர் ஸ்ரீ பருங்குசநாயகி என்பவளால் ரஸமான பிரசங்கமொன்று செய்யப்பட்டது (26—4—40) வெள்ளியன்றும் மறுநாளும் இருஉபந்யாஸம் நடைபெற்றன. சேரன் குளம் ஸ்ரீமதி பங்கஜம்மாளால் பெண்மணிகள் கடமைபற்றி இருதினமும் ரமணீமாய் பிரசங்கிக்கப்பட்டு தீண்டாதார் ஆலயப்ரவேசம் போன்ற ஆவேசத்தைக்கண்டித்தும்மற்றும் நூதனவிஷமக்கிளர்ச்சிகளை எதிர்க்கவேண்டியும் பிரஸ்தாபிக்கப்பட்டன கூட்டத்துக்கு பெண்மணிகள் திரளாக விஜயமாயிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். சனாதன ஆஸ்தீக மாதர்கள் மட்டுமே கூட்டத்தில் அனுமதிக்கப் பட்டனர்,

திருவானைக்காவல்

பிரும்மஸ்ரீ ராமனாத சிரௌதிகளவர்களின் உருவப்படத் திறப்பு விழா.

விக்ரமஹூ சித்திரைமீ 10உ திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இந்த ஊர் வேத பாடசாலையில் ஷை பாடசாலை ப்ராசீன வித்யார்த்திகள் ஸபை ஒன்று கூடிற்று. மற்றும் அநேக ஆஸ்திகர்களும் பண்டிதர்களும் அங்கு பிரஸன்னமாயிருந்தார்கள். வேதாந்ததிலகம் போலகம் பிரும்ம-ஸ்ரீ ராமசாஸ்திரிகள் அவர்கள் இச் சபைக்கு அக்ராஸனம் வகித்தார்கள். அச் சமயம் திருவையார் பிரும்மஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள், புதுக்கோட்டை, மைசூர் முதலிய ராஜஸதஸ்ஸுகளில் ஸம்மானம் பெற்று பரீக்ஷாதிகார ஸ்தானம் பெற்றவரும், ஆஸேது ஹிமாசலம் நூற்றுக்கணக்கான சிஷ்யர்களைப் பெற்றவரும் இந்த பாடசாலையில் 45 வருஷமாக அத்யாபக பதவியை வகித்தவருமான காலஞ்சென்ற ஸாமவேதவித்வான் முள்ளண்டரம் பிரும்மஸ்ரீ ராமனாத சிரௌதிகள் அவர்களுடைய குணகணங்களையும் சரித்திரத்தையும் புகழ்ந்து ஷை பெரியாருடைய உருவப் படத்தைத் திறந்துவைத்தார். பிறகு பழூர் வேதாந்தபண்டிதர் எஸ். வி. சுப்ரமணிய சாஸ்திரிகள் "சிஷ்யதர்மம்,, என்ற விஷயத்தை மிகவும் தெளிவாகவும் அழகாகவும் உபன்யஸித்து ஷை பெரியாருடைய சிஷ்யர்களுக்கு தங்களாசார்யரிடத்திலுள்ள பக்தியையும் அழகாக விளக்கினார்கள். முடிவில் அக்ராஸனரின் முடிவுரைக்குப் பின் ஆர். சுப்பிரமணியசிரௌதிகளால் வித்யார்த்திகளின் சங்கத்தின் சார்பாக வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தணதாம்பூலங்கள் வழங்கியபின் கூட்டம் இனிது முடிவடைந்தது.

பஞ்சப்ராகார உத்ஸவதினமாகிய அன்று ஷை பெரியாரின் சிஷ்யர்களால் சென்ற வருஷங்கள்போல ஸாமவேதஸம்ஹிதாபாராயணமும் ஸ்வாமி ஸன்னிதியில் சிரத்தையுடன் நடத்தப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் ஷை சிஷ்யர்களின் குருபக்தியே காரணமாகும்.

—— எம். ராமனாததீக்ஷிதர்

காப்பிஹோட்டல்களுக்கு தொந்தரவு

தீண்டாதாரை நுழைய விடச்சிபார்சு

குடந்தை முனிஸிபாலிடியின் விபரீதம்

குடந்தையிலுள்ள காப்பி ஹோட்டல்களில் ஜாதி ஹிந்துக்களுக்கு ஸமமாகத் தீண்டாதாருக்கும் பிரவேச உரிமை முதலியன கொடுக்க வேண்டுமென்றும், அப்படி ஸம்மதிப்பவைகளுக்கே லைஸன்ஸ் கொடுக்கவேண்டுமென்றும், இதற்கான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்றும் கவர்ன்மெண்டை வேண்டிக்கொண்டும் குடந்தை முனிஸிபல் காங்கிரஸ் புலிகள் ஒரு தீர்மானம் நிறைவேற்றினவாம்!

சீயாழி.

ஸ்ரீ மத்பாகவத புராண ப்ரவசனம்.

சீகாழி தேர் தெற்குவீதியில் வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ K. S. சுப்பிரமணிய்யர் ஜாகையில் தினந்தோறும் இரவு $7\frac{3}{4}$ முதல் $8\frac{3}{4}$மணி வரையில் பிரும்மஸ்ரீ வித்வான் கா. வே. கோபாலாசாரியார் அவர்களால் ஸ்ரீமத்பாகவத புராண ப்ரவசனம் நடந்து வந்ததில் 8—4—40 சோமவாரத்தன்று ருக்மிணி கல்யாண்ம் வெகு விமர்சையாக நடைபெற்று, 17—4—40 தேதியுடன் பூர்த்தி செய்யப்பட்டது.

அனேக ஆஸ்திகபக்த சிகாமணிகள் ஒவ்வொருநாளும் கதாசிரவணம் செய்து பரவசமடைந்தார்கள்.

ஸ்ரீசங்கரசரித உபன்யாசம்.

ரிடயர்ட் போஸட் மாஸ்டர் பிரும்மஸ்ரீ D. கல்யாணராமய்யர் அவர்கள் கிரஹத்தில் 18—4—40 குருவாரம் ஏகாதசி இரவு $7\frac{1}{2}$ மணிக்கு மேல் சீகாழி பிரம்மஸ்ரீ ரா. சுப்பராய்யர் அவர்களால் ஸ்ரீசங்கரசரிதோபன்யாசம் ஆரம்பித்து $9\frac{1}{2}$மணி வரையில்நடந்தது.

ஸ்ரீபகவத்கீதோபன்யாசம்.

ரிடயர்ட் போஸ்டு மாஸ்டர் முதலிய ஆஸ்திகபக்த சிகாமணிகள் சேர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் காலை $7\frac{1}{2}$ மணியிலிருந்து ஒருமணிகாலம் ஸ்ரீபகவத்கீதா ப்ரவசனம் செய்தல் வேண்டுமென ஷை உபன்யாசகரிம் தெரிவிக்க அன்னவரும் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டு 21—4—40 ஞாயினைறு காலை $7\frac{1}{2}$மணிக்கு ஆரம்பித்து. அனேகம் தமிழ், ஸம்ஸ்கிருதம் நூல்களிலிருந்து மேற்கொள்களை எடுத்துக் கூறி, பின்னர் ஸ்ரீபகவத் கீதையின் மாகாத்மியத்தையும் நன்கு விளக்கி, முதலாவது அத்யாயத்தில் முதற்சுலோகம் ஒன்று மட்டில் நடந்தது. இதனைச் சிரவணிக்கிற அனேகம் ஆஸ்திகரத்னங்களெல்லாம் காலையில் ஸ்நானத்யனிஷ்டான சீலர்களாய் வந்திருந்து சிரத்தா பக்தியுக்தாளாய் அமைதியுடன் கேட்டு ஆனந்தித்தார்கள் அடுத்த 28—4—40 ஞாயிற்றுக்கிழமை தினம் ஷை அத்தியாயம் 2வது சுலோகம் முதல் சொல்லப்படும்.

சீயாழி கோவில் பிரம்மோற்சவம்.

இவ்வுற்சவமானது 12—4—40 முதல் 21—4—40 முடிய பத்து நாட்களும், வழக்கம்படிகளுக்கு யஜுஸ்ஸாம வேத பாராயண, தேவாரபாராயண கோஷ்டிகளுடன் பஞ்ச மூர்த்திகளும், திவ்யாலங்காரணபவங்களுடன் காலை மாலைகளில் காக்ஷியளித்ததானது மிக்க மாக்ஷியாகவேயிருந்தது. இப்போதை ஸ்ரீல ஸ்ரீபண்டார சந்நிதியவர்களது பக்தி விசேஷமானது மிகவும் மெச்சத்தக்கதேயாகும். ஸ்ரீமான் முதலியரவர்களது உற்சவசமாராதனையும் சாலச் சிறந்ததேயாகும்.

ந. நி.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.